**இலயோலா பேச்சுக் கலை மன்றம்: நிர்வாகிகள் தேர்ந்தெடுப்புக் கூட்டம்**

# அனைவருக்கும் அதிகாரம்



**எழுத்து: நிஷாந்த், சி.ந,** 18-UTL-014

“தாம் அதிகாரம் பெறுதல் மட்டுமல்ல. பிறருக்கு அதிகாரம் அளித்தல்…” நூற்றுக்கணக்கான சிறந்த கல்வி நிலையங்களை நடத்தும் இயேசு சபையின் உயர் கல்வி இலக்குகளில் இதுவும் ஒன்று. 2019 நவம்பர் 27ஆம் தேதி இயற்பியல் ஸ்மார்ட் வகுப்பறையில் நடந்த இலயோலா கல்லூரி பேச்சுக் கலை மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுப்புக் கூட்டம் அதற்கான சான்றாக இருந்தது. தங்களது மன்ற நிர்வாகிகளை மாணவர்களே ஒருமித்த கருத்துடன் தேர்ந்தெடுத்தனர்.

பொறுப்பாளர்களையும் அவர்களுக்கான பொறுப்புக்களையும் தெளிவுபடுத்தியதோடு மட்டுமல்லாமல், மன்றத்தின் செயல்முறைகள் குறித்தும், இந்த கல்வி ஆண்டிற்கான திட்டங்கள் குறித்தும் மாணவர்கள் ஆர்வமாக கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தினர்.

தமிழார்வத்தோடு சமூக அக்கறையையும் ஒன்றுபடுத்தி, பேச்சாற்றல் எனும் பெரிய சக்தியை ஆக்க பூர்வமாக பயன்படுத்துவோம் என கலந்துகொண்ட 25 உறுப்பினர்களும் உறுதிமொழி ஏற்றனர். மன்றத்தை நன்முறையில் வழிநடத்துவது என தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளும் உறுதியேற்றனர்.

**மன்றத்தின் புதிய நிர்வாகிகள்:**

**செயலாளர்:** நிஷாந்த் சி.ந, 18-UTL-014; **இணைச் செயலாளர்:** மோனேஷ் மு.க, 18-UTL-003; **துணைச் செயலாளர்:** நிரோஷன் க்ரூஸ் ம., 19-UDJ-041; **கலைத் துறைச் செயலாளர்:** சிர்வின் சகா ஜெஃப்ரி, 18UPB-003; **கணக்காளர்:** கிருஷ்ண குமார், 19-UDJ-007; **வருகைப் பதிவுச் செயலாளர்:** பிரவீன் பா., 19-UPB-041.